பிற்பகல் 12–20

4. கவன ஈர்ப்பு

இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி வட்டம், சிக்கல், கொத்தங்குளம், ஆண்டிச்சிகுளம், வாலிநோக்கம் ஆகிய கிராமங்களில் மர்மக் காய்ச்சலால் மக்கள் பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அ. சவுந்தரராசன், திரு. க. பாலகிருஷ்ணன், திரு. இரா. அண்ணாதுரை, (குறுக்கீடுகள்) இருங்கள். இதை முடித்துவிட்டு பிறகு பேசலாம். (குறுக்கீடுகள்) அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வை (குறுக்கீடுகள்) முடித்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் இம்மாதிரி உட்கார்ந்து கொண்டு பேசக்கூடாது. உட்காருங்கள். அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அ. சவுந்தரராசன், திரு. க. பாலகிருஷ்ணன், திரு. இரா. அண்ணாதுரை, முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள். (குறுக்கீடுகள்) அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை எடுத்துவிட்டேன். பிறகு பேசலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. அண்ணாதுரையையும் பேச அழைத்து விட்டேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நான் பிறகு கூப்பிடுகிறேன்.*

திரு. இரா. அண்ணாதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி வட்டம், சிக்கல், கொத்தங்குளம், ஆண்டிச்சிகுளம், வாலிநோக்கம் ஆகிய கிராமங்களில் மர்மக் காய்ச்சலால் பலர் பாதிக்கப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை" குறித்த, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

[2013 ஏப்ரல் 15

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

1) ஆண்டிச்சிகுளம் கிராம மக்கள்தொகை 612 ஆகும். கடந்த 11–03–2013 அன்று இக்கிராமத்தில் ஏற்பட்ட காய்ச்சலால் சுமார் 31 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்ததன் பேரில், உடனடியாக மருத்துவக் குழு அக்கிராமத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. இக்குழுமூலம் பாதிக்கப்பட்ட ஆண்டிச்சிகுளம் கிராமம் மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் வீடுதோறும் காய்ச்சல் கண்காணிப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது. காய்ச்சல் கண்ட அனைவருக்கும், இரத்த தடவல்மூலம் மலேரியா காய்ச்சல் உள்ளதா என பரிசோதிக்கப்பட்டு, மலேரியாவினால் எவரும் பாதிக்கப்படவில்லை என உறுதி செய்யப்பட்டது.

மேலும், வேறு காய்ச்சல் ஏதும் உள்ளதா என்று கண்டறிய 7 நபர்களிடம் இரத்த மாதிரிகள் எடுக்கப்பட்டு, பரிசோதனை செய்ததில் 4 நபர்களுக்கு டைபாய்டு காய்ச்சல் உள்ளதாக உறுதி செய்யப்பட்டு, அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு அனைவரும் நலமாக உள்ளனர்.

மேலும், இக்கிராமத்தில் கீழ்க்கண்ட நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன:

- இக்கிராமத்தில் குளோரினேசன் செய்யப்பட்ட பாதுகாப்பான குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது; கொசுப் புழு ஒழிப்புப் பணிகள் முடுக்கிவிடப்பட்டு தடுப்புப் பணிகள் எடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வீட்டினுள்ளும் புகை மருந்து அடிக்கப்பட்டுள்ளது.

- தற்போது மேற்படி கிராமம் தீவிர கண்காணிப்பில் உள்ளது.

2) வாலிநோக்கம் கிராமத்தின் மக்கள்தொகை 4929 ஆகும். இக்கிராமத்தில் வசிமா (வயது 2), த/பெ. சுல்தான், என்ற குழந்தைக்கு 28–02–2013 அன்று காய்ச்சல் ஏற்பட்டது. இதற்காக வாலிநோக்கம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் காய்ச்சலுக்காக முதல்கட்ட சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்னர், 01–03–2013 அன்று

2013 ஏப்ரல் 15] [திரு. கே.சி. வீரமணி]

மேல் சிகிச்சைக்காக மதுரையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 03–03–2013 அன்று இறந்துவிட்டது. இரத்தப் பரிசோதனையில் டெங்கு காய்ச்சலுக்கான அறிகுறிகள் எதுவும் இல்லை. இறப்பிற்கான காரணம் இரத்தக்கசிவு காய்ச்சல் என அறியப்பட்டுள்ளது.

மேலும், இதே கிராமத்தைச் சார்ந்த முகமது இர்ஷாத், வயது 1, த/பெ. முகமது அலி ஜின்னா என்ற குழந்தைக்கு 19–03–2013 அன்று வாந்தி, காய்ச்சல் மற்றும் கசிவு ஏற்பட்டு, அதற்காக உள்ளூரில் சிகிச்சையளிக்கப்பட்டது. அதன்பிறகு 20–03–2013 அன்று இராமநாதபுரத்திலுள்ள தனியார் மருத்துவமனையில், உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டது. இரத்தப் பரிசோதனையில் டெங்கு காய்ச்சலுக்கான அறிகுறிகள் ஏதும் இல்லையென உறுதி செய்யப்பட்டது. சிகிச்சை தொடர்ந்த நிலையில் 22–03–2013 அன்று இராமநாதபுரத்திலுள்ள மற்றொரு தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. சிகிச்சை பலனின்றி அக்குழந்தை 23–03–2013 அன்று இறந்துவிட்டது. இறப்பிற்கான காரணம் வைரஸ் காய்ச்சல் எனத் தெரியவந்துள்ளது.

இக்கிராமத்தில் வேறு எவருக்கும் காய்ச்சல் பாதிப்பு இல்லை. எனினும், கீழ்க்கண்ட தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன:

- சிறப்பு மருத்துவக் குழுமூலம் வீடுதோறும் காய்ச்சல் கண்காணிப்புப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- கொசுப் புழு ஒழிப்புப் பணிகள், புகைமருந்து அடிப்புப் பணிகளும் போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வருகின்றன.
- குளோரினேசன் செய்யப்பட்ட பாதுகாப்பான குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கொத்தங்குளம் மற்றும் சிக்கல் கிராமங்களில் எவரும் காய்ச்சலால் பாதிக்கப்படவில்லை. எவ்வித இறப்பும் இல்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது. இருப்பினும், மேற்கூறப்பட்ட அனைத்துக் கிராமங்களும் தீவிர கண்காணிப்பில் உள்ளன.

[திரு. கே.சி. வீரமணி] [2013 ஏப்ரல் 15

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான இந்த அரசு, மாநிலத்தில் டெங்கு, சிக்குன்குனியா மற்றும் மர்மக் காய்ச்சல் இல்லாமல் தடுப்பதற்கும், அவ்வாறு காய்ச்சல் வந்தால் உடனடியாகக் கண்டறிந்து, அதற்குரிய சிகிச்சை அளிப்பதற்கும் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

திரு. இரா. அண்ணாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிக்கையை படித்துப் பார்த்தேன். இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி வட்டம், சிக்கல், கொத்தங்குளம், ஆண்டிச்சிகுளம், வாலிநோக்கம் ஆகிய கிராமங்களில் நீர்நிலைத் தொட்டிகளினுடைய சுகாதாரமற்ற தண்ணீர் காரணமாகத்தான் இந்த மர்மக் காய்ச்சல் ஏற்பட்டிருக்கலாம். இந்த மர்மக் காய்ச்சலால் 4 பேர் மரணமடைந்திருக்கிறார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அநேகமாக 10 பேர் மரணமடைந்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகின்றேன். அறிக்கையிலே, கொத்தங்குளத்தில் ஒரு மரணம்கூட ஏற்படவில்லை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. கொத்தங்குளத்தில் பாலேஸ்வரி என்பவர் மரணமடைந்திருக்கிறார். சிக்கல் கிராமத்தில் வெள்ளையம்மாள் என்பவர் மரணமடைந்திருக்கிறார். எனவே, மொத்தமாக 10 பேர் வரையிலும் மரணமடைந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகின்றேன். அதேபோல, அந்தக் கிராமங்களில் மருத்துவமனைகளை நிரந்தரமாக அமைக்க வேண்டுமென்பதை இந்த நேரத்திலே சபையினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். அதேபோல, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின்சார்பில் அங்கே நிவாரணம் கேட்டு ஓர் ஆர்ப்பாட்டமும் நடைபெற்றிருக்கிறது. எனவே, அங்கு மரணமடைந்தவர்களுக்கு, தமிழக அரசின்சார்பில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிவாரணத் தொகை வழங்க வேண்டுமென்பதை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். அதேபோல, தமிழ்நாட்டில் எங்கும் இந்த நிலை வராமல் இருப்பதற்கு முன் தடுப்பு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டு, சபையினுடைய கவனத்தை ஈர்க்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

2013 ஏப்ரல் 15]

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானம் தொடர்பாக, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அளித்திருக்கக்கூடிய அறிக்கையை நானும் படித்துப் பார்த்தேன். இந்தப் பகுதிகளிலே, இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே சொல்லப்பட்டிருக்கக்கூடிய ஊர்களைத் தவிர்த்து, சாயல்குடி, முதுகுளத்தூர் போன்ற பகுதிகளிலும் இதுபோன்ற மர்மக் காய்ச்சல் தொடர்ந்து அங்கே மக்களைப் பாதித்து வருகின்றது. இதற்காக வேண்டி, அரசு மருத்துவமனைகளுக்குச் செல்ல வேண்டுமென்றால், இராமநாதபுரத்திற்குத்தான் செல்ல வேண்டும். ஆனால், இந்தக் காய்ச்சல் ஒரு மர்மமான காய்ச்சல் என்ற அடிப்படையிலே, வசதியானவர்கள் மதுரைக்கு தனியார் மருத்துவமனைக்குச் செல்ல வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கின்றது.

பிற்பகல் 12—25

அதுமட்டுமல்லாமல், இந்தக் காய்ச்சல் இரத்தக் கசிவினால் ஏற்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தங்களுடைய அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதேநேரத்தில், இது டெங்கு காய்ச்சல் அல்ல என்றும் அந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால், நேற்றையதினம்கூட, மதுரையில், சாயல்குடியைச் சேர்ந்த ஒரு சிறுவன் இறந்து இருக்கிறான். டெங்கு என்று மதுரை மீனாட்சி மருத்துவமனை அதிகாரிகள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதுபோன்ற மர்மக் காய்ச்சல் ஒன்று, திருநெல்வேலி மாவட்டத்தில், தென்காசி பகுதியிலும் வந்திருக்கக்கூடிய ஒரு சூழ்நிலையில், இந்தக் காய்ச்சலை முற்றிலும் ஒழிப்பதற்காக அரசு மேலும் முனைப்புடன் செயல்படுவதற்கும், அதுபோல், அரசு மருத்துவமனைகளிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் உரிய மருத்துவ சிகிச்சை அளிப்பதற்கு, ஏழையெளிய மக்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன்வர வேண்டும் என்றும் அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி தாலுகா, ஆண்டிச்சிகுளம், வாலிநோக்கம், சிக்கல் மற்றும் கொத்தங்குளம்

[திரு. கே.சி. வீரமணி] [2013 ஏப்ரல் 15

ஆகிய நான்கு கிராமங்களில் மட்டுமல்லாமல், அதன் சுற்றுப்புறமுள்ள கிராமங்களையும் சேர்த்து இப்போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இக்கிராமங்களில் சிறப்பு மருத்துவக் குழுவால் வீடுதோறும் சென்று காய்ச்சல் குறித்து கண்காணிப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இக்கிராமங்களில் குளோரின் சேர்க்கப்பட்ட பாதுகாப்பான குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கொசுப் புழு ஒழிப்புப் பணியும் முடுக்கிவிடப்பட்டு தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒவ்வொரு வீட்டின் உட்புறமும் புகை மருந்து அடிக்கப்பட்டுள்ளது. அதுபோன்று, மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவார்ந்த சீரிய சிந்தனையில் உருவான இந்திய மருத்துவ முறையான நிலவேம்பு, மலைவேம்பு மற்றும் பப்பாளி இலைச்சாறு போன்ற இயற்கை மருந்துகள் அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசு, மாநிலத்தில் டெங்கு, சிக்குன்குனியா மற்றும் மர்மக் காய்ச்சல் சுவடுகளே இல்லாமல் தடுப்பதற்கு அனைத்துத் தடுப்பு நடவடிக்கைகளையும் போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு வருகின்றது. எனவே, தமிழகத்தில் டெங்கு, சிக்குன்குனியா மற்றும் மர்மக் காய்ச்சல் குறித்து தமிழக மக்கள் பயமோ, பீதியோ அடையத் தேவையில்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிறகு பேசலாம். இன்னும் இரண்டு அலுவல்கள் உள்ளன. அவை முடிந்த பிறகு பேசலாம். உட்காருங்கள்.

5. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2013

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2013 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,